நாள்: 19.06.2026
OS. 35/2021
பெயர் மனோகரன்
வா.சா.1

<u>குறுக்கு விசாரணை</u>

நான் கம்பம் புதுப்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். நான் ஆவின் நிறுவனத்தில் வேலை பார்த்து ஓய்வு பெற்று தற்போது விவசாயம் செய்து வருகிறேன். நான் ஓய்வு பெற்ற பின்னர் தான் புரோநோட்டு எழுதப்பட்டது. நான் பணியில் இருக்கும்போது முத்துராமலிங்கத்திற்கு கடன் கொடுக்கவில்லை . ஓய்வு பெற்ற பின்னர் தான் கொடுத்தேன். என் தகப்பனார் பெயர் வீரசிக்கு ஆகும். அவர் 01.02.2025 ல் என் தந்தை காலமானார். என் தந்தைக்கு முன்னரே என் தாயார் காலமாகிவிட்டார். என்னுடன் பிறந்தது 2 சகோதரிகள். ஒருவர் இறந்து விட்டார். ஒரு சகோதரி திருமணம் ஆகாமல் என்னுடன் வசித்து வருகிறார். நானும், என் தந்தையும் ஒரே வீட்டில் தான் இருந்தோம்.

இறந்துபோன முத்துராமலிங்கம் என் தந்தைக்குதான் பழக்கம். அது மூலமாக தான் எனக்கு பழக்கம். முத்துராமலிங்கத்திற்கு 4 பெண் வாரிசுகள். அவர்கள் எங்கு உள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. அவர்கள் 25 ஆண்டுகளுக்கு முன்னரே திருமணம் ஆகி வெளியூரில் வசித்து வருகிறார்கள் என்றால் முதலில் தெரியாது. பின்னர் தெரிந்து கொண்டேன்.13.01.2020 ம் தேதி என்னிடம் முத்துராமலிங்கம் ரூ.6 லட்சம் கடன் கேட்டார். சாட்சி மேலும், தன் சாட்சியத்தில் முத்துராமலிங்கம் கடன் கொடுப்பதற்கு 2 நாட்களுக்கு முன்பு என்னிடம் கடன் கேட்டார் என்றும், நான் 13.01.2020 ல் கடன் கொடுத்தேன் என சாட்சியம் அளிக்கிறார். மேற்படி விவரத்தை என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலம், பிராது, வழக்கறிஞர் அறிவிப்பில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

முத்துராமலிங்கம் மகன் பரமேஸ்வரனை எனக்கு பணம் கொடுக்கும்போது தெரியாது. அவர் இறந்தபின்னர் பணம் கேட்க போகும் போது அவரது மகன் பரமேஸ்வரனை எனக்கு தெரியும். முத்துராமலிங்கம் புரோநோட்டின் அடிப்படையில் கடன் பெற்றதாக அவரது வீட்டில் சொன்னேன். நான் சொல்வது போல் கடன் பெற்ற விவரத்தை தெரிவிக்கவில்லை என்றும், நான் வழக்கு புரோநோட்டை 1,2 பிரதிவாதிகளிடம் காட்டிய போது அவர்கள் புரோநோட்டுகளில் உள்ளது முத்துராமலிங்கத்தின் கையொப்பம் அல்ல என்று கூறினார்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் நீதிமன்றத்தில் குறிப்பாணை தாக்கல் செய்து புரோநோட்டு கையொப்பத்தை பார்க்க முன்வரவில்லை என்றால் சரியல்ல. 6 லட்சம் என்பது பெரிய தொகை என்றால் சரிதான். முத்துராமலிங்கம் கடன் வாங்கும் போது 80 வயது என்றால் சரிதான். முத்துராமலிங்கம் 80 வயது இருந்த நிலையில் கடன் கேட்கும் விவரத்தை அவரது மனைவியிடமோ, மகனிடமோ சொல்லவில்லை என்றால் நான் கேட்கவில்லை, ஆனால் அவர் நல்ல திடகாத்திரமாக தான் இருந்தார். முத்துராமலிங்கம் பற்றி எனக்கு

தெரியாது என்றும், அவருக்கும் எனக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் இல்லை. அவருக்கு 2017 ல் மதுரை அப்போலோ மருத்துவமனையில் இருதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

நான் வட்டி தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் வட்டிக்கு தான் பணம் கொடுத்தேன். புதுப்பட்டியில் வட்டிக்கு பணம் கொடுக்கும் நபர்கள் இருக்கிறார்கள் என்றால் இருக்கலாம். முத்துராமலிங்கம் தவணை முறையில் தான் கடன் கேட்டார் என்றால் சரியல்ல. நான் கம்பம் TMB வங்கியில் வரவு செலவு கணக்குகளை வைத்துள்ளேன். புதுக்கோட்டையிலும் வைத்துள்ளேன். 13.01.2020 ம் தேதி என் வங்கிக்கணக்கில் எவ்வளவு பணம் இருந்தது என்பதை காட்ட நான் வங்கி ஸ்டேட்மெண்ட்டை பார்க்க தயாராக உள்ளேன். கடன் கொடுப்பதற்கு முன்னர் நானும், என் தந்தையும் குடும்ப சொத்துக்களை விற்பனை எதுவும் செய்திருக்கலாம் என்றால் என் தந்தை செய்திருக்கலாம். நான் விற்பனை செய்யவில்லை. என் தந்தை இவ்வழக்கு பிரதிவாதிகள் மீது தேனி மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.144/2020 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 01.08.2019 ம் தேதி முத்துராமலிங்கம் ரூ.10,00,000 கடன் பெற்றுக்கொண்டு திரும்ப தரவில்லை என்று தான் என் தந்தை வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

K.K.பட்டி யில் 2 ஏக்கர் 44 செண்ட் நிலம் உள்ளது. அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். 1, 2 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரை சங்கதிகளை நான் படித்து பாத்துள்ளேன். எதிர் வழக்குரையில் வழக்கு புரோநோட்டில் உள்ளது முத்துராமலிங்கம் கையெழுத்து இல்லை என தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. போர்ஜரி ஆவணம் என்று சொல்லியுள்ளார்கள். 2 ம் பிரதிவாதி வழக்கறிவிப்பை பெற்றுக்கொண்டு என்னை சந்தித்து வழகக 3 புரோநோட்டுகளில் உள்ளது முத்துராமலிங்கம் கையெழுத்து அல்ல என கூறினார் என்றால் சரியல்ல. வழக்கு தொகையை பிரதிவாதி செலுத்து கடமைப்பட்டவர்கள் என சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். வழக்கு புரோநோட்டுகளை கைரேகை நிபுணருக்கு அனுப்பி நிரூபணம் செய்ய தயாராக உள்ளேன் என்றால் தயாராக உள்ளேன். புதுப்பட்டி நெல் வியாபாரி சந்திரன் எனக்கு தெரியுமா என்றால் அவர் தெரியும், அவர் நெல் வியாபாரம் பார்கிறாரா என்று எனக்கு தெரியாது. அவர் என் சமுதாயத்ததை சார்ந்தவர்கள். அதேபோல் டாக்டர் மணிமோகன், கண்ணன், கண்ணன் மனைவி சுகுனா ஆகியோரை தெரியும். அவர்கள் எங்கள் ஊர்காரர்கள் மற்றும் எங்கள் சமுதாயத்தை சார்ந்தவர்கள். மேற்படி நபர்கள் முத்துராமலிங்கம் வாரிசுகள் மீது பணத்தை திரும்ப பெறுவதற்காக வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். மணிமாறன் என்பவர் முத்துராமலிங்கத்திற்கு மேலாளர் என்ற நிலையில் கொடுக்கல் வாங்கல் செய்து வந்தார் என்றால் சரியல்ல. முத்துராமலிங்கத்தை தெரிந்திருந்தால் மணிமாறனை தெரிந்திருக்கும் என்றும், மணிமாறனை தெரியாது என நான் சொல்லியதில் இருந்தே முத்துராமலிங்கத்தை தெரியும் என நான் சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல.

முத்துராமலிங்கம் இருக்கும் வரை நான் வழக்கு தாக்கல் செய்யவில்லை. மணிமாறன் முத்துராமலிங்கம் இறந்த பின்னர் அவரிடம் இருந்த பத்திரங்கள், புரோநோட்டு, பணங்களை எடுத்து சென்றுவிட்டார் என்றும்,அதன் பின்னர் நெல்வியாபாரி சந்திரன் மூலம் என்னிடம் கொடுத்து அதன் மூலம் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தந்தை தாக்கல் செய்துள்ள வழக்கு புதுப்பட்டியை சேர்ந்த கல்யாணித்தேவர் மகன் முத்தையா சாடசியாகவும், வீருசிக்கு மகன் ரவிச்சந்திரன் புரோநோட்டை எழுதியுள்ளார்கள் என்றால் சரிதான் அதே நபர்கள் தான் இந்த வழகக்கு புரோநோட்டுகிலும் சாட்சிய கையெழுத்து போட்டுள்ளார்கள். நான் வருமான வரி செலுத்தும் நபர் தான். 20 ஆயிரத்திற்கு மேல் வரவு செலவு, கடன்கள் செய்தால் வங்கி காசோலை மூலம் தான் செய்யவேண்டும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. காசோலை மூலம் 20 ஆயிரத்திற்கு மேல் செய்யாத பரிவர்த்தனையை சட்டப்படி வசூல் செய்யமுடியாது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

புரோநோட்டு சாட்சிகளை முத்துராமலிங்கம் தான் அழைத்து வந்தார். எங்கிருந்து வந்தார் என்று எனக்கு தெரியாது. சாட்சிகளை எனக்கு தெரியும். எழுதியதும், சாட்சியும் என் உறவினர் என்றும், சாட்சி முத்தையா என் ஊர்காரர்கள் என்றும், அவர்கள் எனக்கு தான் தெரிந்த நபர்கள் என்றும், அவர்களுக்கும், முத்துராமலிங்கத்துக்கும் எந்த தொடர்பும் கிடையாது என்றால் சரியல்ல. முத்துராமலிங்கம் கொடுக்கல், வாங்கல் செய்யவில்லை. அவர் வியாபாரி. விவசாய பொருட்களை வாங்கி விற்கும் தரகு தொழில் அவர் செய்து வந்தார் என்றால் சரியல்ல. என் தந்தை நல்ல திடக்காத்திரமாக தான் இருந்தார். முத்துராமலிங்கத்திற்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து அல்ல என்றும், அவர்கள் குடும்பத்தில் உள்ளது கூட்டுகுடும்ப சொத்து என்றால் சரியல்ல. முத்துராமலிங்கம் வாரிசுகள் தேனி மாவட்ட நீதிமன்றத்தில் அசல் வழகக்கு எண்.20/2023 தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு புரோநோட்டு அடிப்படையயில் எனக்கு எந்த தொகையும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் உண்மையில் பணம் கொடுத்திருநதால் அவர் உயிருடன் இருக்கும்போதே வழக்கு தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

M SHIVAJI CHELLIAH
Digitally signed by M SHIVAJI CHELLIAH
Date: 2026.06.19 17:59:23 +0530

சார்பு நீதிபதி
உத்தமபாளையம்